## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் - 2015

---

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1992 இன் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் 2014 ஆம் ஆண்டு வரையும் நிதிக்கூற்றுக்களில் அரசின் மூலதன மானியம் வேறாக கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 4,109,392 தொகையான அந்த மீதி திரண்ட நிதியத்தில் சீராக்கம் செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டிற்குரியதாக கிடைக்கப்பெற்ற மொத்த மூலதன மானியமான ரூபா 11,250,000 தொகை மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டமையினால் ஆண்டின் மிகை அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு வரையில் நடாத்தப்பட்டு முடிவடைந்திருந்த பாடநெறிகளுக்காக கிடைத்த கட்டணங்களில் அதற்குரிய செலவினங்கள் கழிக்கப்பட்டதன் பின்னர் ரூபா 13,364,818 மிகையை வருமானத்திற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது நூலகப் புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட ரூபா 276,765 தொகையான காசோலை இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும், அது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ரூபா 650,000 கிரயமான மோட்டார் வாகனம் மீளாய்வாண்டின் போது ரூபா 550,500 இற்கு கைதவிர்க்கப்பட்டிருந்த போதிலும், சொத்தின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு என்பவற்றை புத்தகங்களிலிருந்து அகற்றுதல் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது சொத்துக்களின் கிரயம்

பணப் பெறுவனவாகக் காண்பித்து ஆண்டின் பெறுமானத்தேய்வு அளவால் குறைத்து பிழையாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 04 ஆம் அத்தியாயத்தின் | |
| | (i) 4.2.1 (ஆ) மற்றும் (இ) பந்திகள் | ஆகக் குறைந்தது 03 வருட காலத்திற்கான கொள்வனவு நடவடிக்கைகள் பிரதான கொள்வனவுத் திட்டத்தில் நிரற்படுத்தப்பட்டு அடுத்துவரும் ஆண்டிற்கான கொள்வனவு நடவடிக்கைகள் விரிவானதொன்றாக தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 4.3 (அ) பந்தி | சகல அண்மித்த செலவினங்களை உள்ளடக்கி மொத்தக் கிரய மதிப்பீடொன்று நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

மீளாய்வாண்டின் போது நிறுவகத்தினால் நடாத்தப்பட்டு பெறப்பட்ட பல்வேறு பாடநெறிகள் தொடர்பான விரிவுரைகள் மற்றும் பாடநெறிகளின் இணைப்புக் கட்டணத்தை உள்ளடக்கிய ரூபா 8,195,810 பங்களிப்புப் படியொன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி கல்விசார் பதவியணியினரில் 95 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தன.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 10,428,163 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 907,191 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 11,335,354 அதிகரிப்பாக இருந்தது. மீளாய்வாண்டின் சம்பளம் மற்றும் வேதனங்களை உள்ளடக்கிய ஊழியர் நலன்கள் மற்றும் நிறுவகத்தினது நிர்வாகச் செலவினம் என்பன

ரூபா 19,641,062 இனால் அதிகரித்திருந்த போதிலும் அரசாங்கத்தின் மானியம் ரூபா 31,694,961 இனால் அதிகரித்திருந்தமை நிதி விளைவின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை ஒப்பீடு செய்தபோது 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நிதிசார் பற்றாக்குறையொன்றைக் காண்பித்திருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் போது நிதி மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு என்பவற்றைக் கவனத்திற்கொள்ளும் போது, நிறுவகத்தின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டில் ரூபா 25,805,180 நேர்ப் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அது 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 80,239,014 வரை தொடச்சியாக அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------

### 4.1 செயலாற்றல்

------------------

1992 இன் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

(அ) சமூக வேலை மற்றும் சமூக அபிவிருத்தி கல்வி மேம்பாட்டிற்கான திட்டம், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேலை நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

(ஆ) சமூக வேலை, சமூக அபிவிருத்தி தொடர்பான பட்டம் மற்றும் பட்டப்பின்படிப்பு பாடநெறிகளை நடாத்துதல் மற்றும் சமூக நலன்புரித்திட்டம் மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக கற்கைகளை நடாத்துதல் மற்றும் அவற்றை மேம்படுத்துதல்.

(இ) சமூக வேலைகளின் போது தொழில்நுட்ப உபயோகப்படுத்துதலை உள்ளடக்கிய சமூக வேலைகள் மற்றும் சமூக அபிவிருத்தி கல்வித் திட்டத்தில் வடிவமைக்கப்பட்ட ஆய்வொன்றை ஆரம்பித்தல் மற்றும் மேம்படுத்துல்.

(ஈ) சமூக நலன்புரி பதவியணியின் தொழில்ரீதியானதும் முகாமைத்துவரீதியானதுமான இயலுமையை அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளைத் திட்டமிடல்.

(உ) சமூக வேலை மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பாக நிபுணத்துவ சேவையினை அரசாங்கத்திற்கும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளுக்கும் வழங்குவதற்கு திட்டமிடல் மற்றும் அதற்குச் சமமான நோக்கங்களையுடைய ஏனைய நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுதல்.

04 பிரதான பிரிவுகளுக்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) சமூக சேவைக் கல்லூரி**

-----------------------------------------------

(i) சமூக வேலை தொடர்பான பட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை மூன்று மொழிகளிலும் பதிவுசெய்துள்ள மாணவர் எண்ணிக்கை மீளாய்வாண்டின் இறுதியில் 30 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ii) கள வேலைப் பிரிவில் 06 நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக செயலாற்றல் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பயிற்சிப் பிரிவு**

(i) பயிற்சிப் பிரிவின் மூலம் பாடநெறி மற்றும் 58 குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் 49 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ii) இலக்கிடப்பட்ட பிரகாரம் 05 குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், 03 டிப்ளோமா பாடநெறிகள், 03 சான்றிதழ் பத்திர பாடநெறிகள் மற்றும் உள்ளக உத்தியோகத்தர்களுக்கான 02 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) சமூக அபிவிருத்தி கொள்கை, ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு**

சமூக அபிவிருத்தி கொள்கை தயாரித்தல், ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் வெளியிடுகளை வெளிக்கொணர்தல் இந்த பிரிவின் மூலம் செய்யப்படுவதுடன் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் 15 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 4,330,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அனுராதபுரம், இரத்தினபுரி மற்றும் அம்பாறை பயிற்சி நிலையங்களில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள ஆராய்ச்சிகளை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 2015 – 2016 என்ற 02 வருடங்களிற்கு திட்டமிடப்பட்ட முதியோர் சமூகத்தை வைத்து புனருத்தாபனம் செய்யும் (Community Base Aged Care System) ஆராய்ச்சி செயற்திட்டம் என்பன மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) துறைவாரி உத்தியோகத்தரான ஆராய்ச்சி உத்தியோகத்தருக்கு தரவு சேகரித்தல், தெரிவு செய்தல் மற்றும் தரவு பகுப்பாய்வு செய்தலின் நவீன திட்டம் மற்றும் அதற்குரிய கணனி பயன்பாடுகள் தொடர்பான அறிவினை மேம்படுத்தவதற்காக போதியளவான பயிற்சியொன்றை வழங்குவதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற விரிவுரையாளரொருவர், சேவையிலிருந்து விலகி வேறொரு நிறுவனத்தில் விரிவுரையாளராக சேவையில் இணைந்திருந்ததுடன் அவரால் பெறப்பட்ட சம்பளத்துடனான கற்கை விடுமுறைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,783,699 தொகை உடன்படிக்கையின் பிரகாரம் இரண்டாவது நிறுவனத்திற்கு கையேற்பதற்கு இணக்கப்பாட்டினை வெளிப்படுத்திய போதிலும், அதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பிணையாளர்களிடமிருந்தும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சமூக அபிவிருத்தி நிறுவகத்திற்குரிய களணியில் உள்ள மாணவர் விடுதியில் ஒரே தடவையில் 20 பேருக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு முடியுமாக இருந்த

போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது விடுதியில் 04 பெண் மாணவர்களுக்கு மாத்திரம் தங்குமிடம் வழங்கப்பட்டிருந்தது.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 பெப்ரவரி 21 ஆந் திகதி நேர்முகப்பரீட்சை மூலம் உள்ளபடியான பதவியான சமூகசேவைக் கல்லூரியின் பணிப்பாளராக தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் மீளாய்வாண்டின் போது சமூக அபிவிருத்தி கொள்கை ஆராய்ச்சிப் பிரிவிற்கு மாற்றப்பட்டிருந்தார்.

(ஆ) நிறுவகத்தின் பணிப்பாளர் (நிதிக் கட்டுப்பாடு) பதவி 2014 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப்பட்டமையால் அதற்காக தகுதியான உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்க்கப்படாமல், ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் காணப்படாத உத்தியோகத்தர் ஒருவர் பதிற் கடமைக்காக நியமிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 221,878 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பயிற்சிப் பிரிவின் பணிப்பாளரை உள்ளடக்கிய 10 பயிற்சி உத்தியோகத்தர்களைக் கொண்ட கல்விசார் பதவியணியின் 11 உத்தியோகத்தர்களின் வருடாந்த சம்பளமாக ரூபா 6,166,895 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் இந்த உத்தியோகத்தர்களில் வார நாட்களில் நடாத்தப்பட்ட 32 குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பங்குபற்றிய வார நாட்களின் எண்ணிக்கை 82 நாட்களாகும். இதன் பிரகாரம் உத்தியோகத்தர்கள் வாரத்தின் மிகுதி நாட்களில் நிறைவேற்றிய கடமைகள் தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிறுவகத்தின் கல்விசார் பதவியணியில் 24 சதவீதமும், கல்விசாரா பதவியணியில் 11 சதவீதமும் ஆன வெற்றிடங்கள் காணப்பட்டன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டு முதல் எதிர்வரும் 04 வருடங்களை மேவுகை செய்யும் வகையில் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2011 முதல் 2015 ஆம் ஆண்டு வரை மேவுகை செய்யும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த சமூக கல்லூரிக்குரிய 04 நிகழ்ச்சித்திட்டங்களும், பயிற்சிப் பிரிவின் 03 நிகழ்ச்சித்திட்டங்களும் மற்றும் சமூக அபிவிருத்தி கொள்கை, ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவின் 04 நிகழ்ச்சித்திட்டங்களும் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிறுவகம் மீளாய்வாண்டின் போது பாடநெறிகளை நடாத்தியதால் ரூபா 30,445,887 தொகையை அறவிட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் பாடநெறி நடாத்துவதால் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்த வருமானம் அதற்குள்

உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிறுவகத்தினால் திறைசேரி நிதி ஏற்பாட்டிற்கு மேலதிகமாக நிறுவகத்தின் வருமானங்களும் செலவினங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய விபரங்கள் பாதீட்டில் உள்ளடக்கப்படாமையினால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.4 கொள்வனவுத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த கொள்வனவுத் திட்டம் மூலம் மூலதனச் சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 7,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது பயன்படுத்தப்பட்ட தொகை ரூபா 4,222,842 அதாவது 60 சதவீதமாக இருந்தது.

(ஆ) மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக கொள்வனவுத் திட்டம் மூலம் ஒதுக்கப்பட்ட ரூபா 6,000,000 தொகையினை விஞ்சி மீளாய்வாண்டின் போது ரூபா 6,929,273 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) 2015 இன் கொள்வனவுத் திட்டத்திற்கு புறம்பாக பிரதான அலுவலகத்திலும் பிரதேச நிலையங்களிலும் ரூபா 2,714,429 பெறுமதியான பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | - | பிழையாக கணக்கு வைக்கப்பட்டமை |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | - | திறைசேரி நிதி ஏற்பாட்டிற்கு மேலதிகமாக உழைக்கப்பட்ட வருமானம் பாதீடு தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படாமை. |
| (இ) | மனிதவள முகாமைத்துவம் | - | பதவியணியில் வெற்றிடம் காணப்பட்டமை, உரிய தகைமைகளின் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமை, உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் கடமைக் காலம் தொடர்பாக சரியான மதிப்பீடின்மை. |
| (ஈ) | நிதியக் கட்டுப்பாடு | - | மிகை நிதியம் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டமை. |